செ. வெ. எண். 105 நாள் 14.02.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று ( 14.02.2020 ) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது, தமிழ்நாடு மிருகவதை தடுப்புச் சட்டம் ( ஜல்லிக்கட்டு நடத்துதல் ) விதிகள் 2017-ன்படி ஜல்லிக்கட்டு நடத்த விரும்பும் குழுவினர் ஒரு மாதம் முன்னதாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனு அளித்திட வேண்டும். அனுமதி அளிக்கப்பட்ட தேதியில் மட்டுமே ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் வருவாய், கால்நடை பராமரிப்புத்துறை, காவல், சுகாதாரம், தீயணைப்பு, பொதுப்பணித்துறை அலுவலர்களை கொண்ட குழு அமைத்து, ஜல்லிக்கட்டு நடத்துவது தொடர்பான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளப்படும்.

ஜல்லிக்கட்டு நடத்துவது தொடர்பாக தொடர்புடைய துறையினரால் ஜல்லிக்கட்டு குழு அமைத்து நிலையான வழிகாட்டு விதிகள் ( Standard Operating Procdure ) உருவாக்கி ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டும். இக்குழுவினர் காளைகள் வைத்திருப்போரிடம் தனியே விழிப்புணர்வு கூட்டம் நடத்த வேண்டும். பார்வையாளர்கள் அமரும் இடம் உள்ளிட்ட நிகழ்ச்சிக்கு தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் மேற்கொள்வதுடன் அரசு விதிகள் முழுமையாக கடைபிடிக்கப்பட வேண்டும். மாவட்ட நிர்வாகம் அனுமதி அளிக்கும் இடங்களில் மட்டுமே ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டும். நிகழ்ச்சி குறித்த விவரங்கள் வீடியோவாக பதிவு செய்திடல் வேண்டும்.

கால்நடை பராமரிப்புத் துறையினர் ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் காளைகள் குறித்த விவரங்களை இணைய வழியில் ( Online )-இல் பதிவு செய்தல், பதிவு செய்யப்பட்ட காளைக்கு token வழங்குதல், மாடுபிடி வீரர் குறித்த விவரங்கள், நடைபெறும் இடம் குறித்த மாதிரி வரைபடம் தயாரித்தல் வேண்டும். வருவாய் கோட்ட அலுவலர் குழுவினருடன் ஜல்லிக்கட்டு நடைபெறும் இடத்தை ஆய்வு செய்திட வேண்டும். ஜல்லிக்கட்டு நிகழ்வின் ஓடு பாதையின் இருபுறமும் இரட்டை தடுப்பு உள்ளதை உறுதி செய்திட வேண்டும். வாடிவாசலுக்கு பின்புறம் தனியாக நுழைவு வாயிலை பங்கேற்கும் காளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அமைத்திட வேண்டும். காளைகள் வெளிவரும் வாசலிலும், அடைக்கும் இடத்திலும் 8 அடி தடுப்புச் சுவர் கதவு மற்றும் 5 கி. மீ. சுற்றளவில் கிணறு இல்லாமல் இருப்பதை உறுதி செய்திட வேண்டும். அவ்வாறு கிணறு இருக்கும்பட்சத்தில் அதனை முறையாக பாதுகாப்பாக மூடி இருப்பதை உறுதி செய்திட வேண்டும். தீயணைப்பு வாகனம் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கால்நடைகளுக்கு தேவையான தண்ணீர், உணவு மற்றும் காளைகளின் உரிமையாளர்களுக்கு உணவு, தண்ணீர் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கு தேவையான உணவு, தண்ணீர் ஆகியவற்றை விழாக் குழுவினர் ஏற்பாடு செய்திட வேண்டும். மருத்துவக் குழுக்களை அமைத்து காளைகளை பரிசோதித்து ஒவ்வொரு காளைக்கும் மருத்துவ சான்று வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட கால்நடைகளை மருத்துவ சிகிச்சைக்கு அழைத்துச் செல்லும் கால்நடை மருத்துவ விபத்து வாகனம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

சுகாதாரத் துறையினர் மாடுபிடி வீரர்களை மருத்துவ பரிசோதனைக்கு பின்னர் அனுமதிக்க வேண்டும். மாடுபிடி வீரர்கள் போதை மருந்து, ஆல்கஹால் அருந்தி உள்ளனரா என கண்டிப்பாக பரிசோதனை செய்த பின்னதே களத்திற்குள் அனுமதிக்க வேண்டும். காயம்பட்ட வீரர்களுக்கு

முதலுவிக்கான அனைத்து மருத்துவ உபகரணங்களும் வைத்திருக்க வேண்டும். அவர்களை உடனடியாக அருகாமையில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்ல தேவையான ஆம்புலன்ஸ் வாகனம் நிறுத்தி வைத்திருக்க வேண்டும். காவல்துறையினர் போதுமான காவலர்களை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்திட வேண்டும். பதிவு செய்யப்பட்ட காளைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட மாடுபிடி வீரர்கள் தவிர மற்றவர்களை அப்புறப்படுத்தி பார்வையாளர்கள் அமருமிடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். பாதுகாப்பு கேமிராக்கள், வெப் கேமிராக்கள் ஏற்பாடு செய்திட வேண்டும். ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி பாதுகாப்பு பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்காணூர்பட்டியில் 16.02.2020 அன்று நடைபெற உள்ள ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியைத் தொடர்ந்து, மாதாக்கோட்டை, மானோஜிப்பட்டி, நாஞ்சிக்கோட்டை, ரெட்டிப் பாளையம் ஆகிய இடங்களில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. எஸ். எஸ். மகேஸ்வரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ( பொது ) திருமதி. முத்து மீனாட்சி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி. வேலுமணி, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் டாக்டர் தமிழ்செல்வன், வருவாய்த்துறை, தீயணைப்பு, சுகாதாரம், திருக்காணூர்பட்டி, மாதாக்கோட்டை, மானோஜிப்பட்டி, நாஞ்சிக்கோட்டை, ரெட்டிப் பாளையம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஜல்லிக்கட்டு விழா குழுவினர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.